தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டி 2019

**13 வயதுப்பிரிவு**
(01.01.2006 – 31.12.2007 வரையில் பிறந்தோர்)

## சூரியப்புதல்வர்கள்

தமிழ் இனத்தின் இருப்பிற்காய் நெருப்பில் குளித்தவர்கள். இருட்டுக்குள் எங்கள் தேசம் இடறி விழுந்த காலத்தில் தம்மில் கந்தகத்தீமூட்டி ஒளி தந்த உன்னதங்கள். விதி வந்தால் சாவோமென நொந்து கிடக்காமல் விழி நிமிர்த்தி, வீரத் திறல் கொண்டு, பகையழித்து தமிழீழத் தனியரசு அமைக்கும் விடுதலைப் புலியாக நிமிர்ந்தவர்கள்.

போரியல் அறங்காத்து, மானுட நேயம் போற்றி, தனிமனித ஒழுக்கம் பேணும் பெருந்தலைவன் வழிகாட்டலில் வளர்ந்து, அவ்வாறே தாமும் மிளிர்ந்தவர்கள். தம் உயிரால் வேலி அமைத்து எம்மைக் காத்த காவலர்கள். தாய்மண்ணின் மகுடங்கள். இருளுள் இருளாகி, தீயுள் தணலாகி, கடலுள் அலையாகி, ஒளிரும் சுடரான சூரியப்புதல்வர்கள். அவர்கள் மாவீரர்கள்.

ஆம். அவர்களின் வீரமும், ஈகமும், இலட்சிய உறுதியும் சொற்களில் வடித்துவிட முடியாதவை. காலம் கடந்தும் ஞாலத்தில் நிலைபெறவும், எங்கள் அடுத்தடுத்த தலைமுறைகள் அறிந்துணர்ந்து போற்றிடவும் 'சூரியப்புதல்வர்கள்' ஆவண நூலும் அவர்கள் வரலாறுகள் சொல்லி நிற்கும்.

எவ்வளவு பெரிய எதிர்வுகூறல்! இருந்தும் என்ன? அடுத்த தலைமுறைக்குச் சொல்லி வளர்க்கிறோமா? மாண்டவர் கனவை மனதில் சுமக்கின்றோமா? தமிழர் ஒவ்வொருவரும் தமக்குள் கேட்க வேண்டும். விடைகள் எமக்குத் தெளிவைக் கொடுக்கும். தலைகள் குனியும் நிலையைத் தடுக்கும்.

முள்ளிவாய்க்கால் முற்றுகைப்போருடன் முடிவுக்கு வந்ததா தமிழர் வீரம்? வரிப்புலிச்சேனை எல்லைகள் வரித்து, பரந்து விரிந்த தமிழீழ நிலமும், மகிழ்ந்து நிறைந்த பண்பாட்டு வாழ்வும் பாதியில் முடியுமென்றால் ஏன் இந்த உயிர்க்கொடை?

சிந்தித்துப் பாருங்கள்! எம் வீட்டு முற்றத்தில் மாற்றார் படைகள் எப்போதும் எமக்குக் காவலாய் இருக்காது. தட்டித்தவறியும் தமிழர் குரல் ஓங்கி ஒலிக்க, ஒட்டிப் பிழைப்பவர்கள் ஒருபோதும் இடங்கொடார். நல்லிணக்கம் என்பார். நல்லாட்சி என்பார். ஆட்சியில் அமர்ந்தவுடன் விட்டதைத் தொடர்வார். பின் மற்றவர் வருவார். சத்தம் இல்லாமல் மிச்சத்தை முடிப்பார். ஆண்டுகள் பத்து உருண்டோடி விட்டன. ஆனாலும் எமக்குள் மாறுதல் இல்லை!

விம்மி அழுவதனால் விடுதலை கிடைக்குமா? இல்லவே இல்லை. தொழுது வாழ்வதற்கா விலைகள் கொடுத்தோம்? எம் மண்ணை மீட்டு, ஆண்ட தமிழினம் மீண்டும் ஆளவும், மாண்டவர் கனவு மகுடம் சூடவும் ஒவ்வொரு தமிழனும் வீறுகொண்டு எழ வேண்டும்.

வலுப்பெற்றிருந்த யாழ்ப்பாணத் தமிழரசின் வீழ்ச்சிக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், வல்லமை வாய்ந்த தமிழீழத் தனியரசைத் தமிழர்களால் கட்டியெழுப்ப முடிந்ததெனில், முள்ளிவாய்க்கால் வரை திட்டமிட்டு நடத்தப்பட்ட இன அழிப்புப் போர் எமது இலட்சியத்தைச் சிதைத்து விடுமா? ஒருபோதும் இல்லை. ஆழி சூழ்ந்த ஈழத்தீவில் தமிழீழத் தனியரசு அமைந்தே தீரும். சூரியப்புதல்வர்களின் கனவு மெய்ப்படும். இது உறுதி.

நன்றி,
வணக்கம்.